# 07-04-2024 செய்தி

## சர்வதேச சட்டம் சொல்வது என்ன?

- வியன்னா ஒப்பந்தத்தின் கீழ், வெளிநாட்டுத் தூதரகங்கள் தனி இறையாண்மை மிக்கவை. ஒரு நாட்டில் இருக்கும் இன்னொரு நாட்டுத் தூதரகத்துக்குள் தூதரின் அனுமதி இல்லாமல் சட்ட அமலாக்கத் துறையினர் நுழையமுடியாது.

- தற்போது மெக்ஸிகோ தூதரகத்துக்குள் அதிரடியாக நுழைந்துள்ள ஈக்வடாரே, பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள தங்களது தூதரகத்தில் விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜீலியன் அசாஞ்சேவுக்கு 7 ஆண்டுகளாக அடைக்கலம் அளித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

- இதனால் பாலியல் வழக்கில் நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்திருந்த அவரை பிரிட்டன் போலீஸாரால் மீண்டும் கைது செய்ய முடியாத நிலை நிலவி வந்தது.

- கடைசியில் ஈக்வடார் அனுமதி அளித்ததற்குப் பிறகே அசாஞ்சேவை பிரிட்டன் போலீஸார் 2019-ஆம் ஆண்டு கைது செய்தனர்.

SURESH'